sam
singaporeartmuseum
CONTEMPORARY ART IN SOUTHEAST ASIA

# Robert Zhao Renhui

# SEEING FOREST

## ராபர்ட் ஜாவோ ரென்ஹுய்
## காட்டைப் பார்த்தல்

காட்டைப் பார்த்தல் என்பது 2024 இல் 60வது சர்வதேசக் கலைக் கண்காட்சியான ‘லா பினாலே டி வெனிசியா’வில் சிங்கப்பூர் பெவிலியனுக்காக ராபர்ட் ஜாவோ ரென்ஹுய் என்பவரால் உருவாக்கப்பட்ட ஒரு படைப்பாகும்.

இயற்கை உலகிலுள்ள இறுதியில் அறியவே முடியாதவற்றைக் கவனிப்பது ஜாவோவின் கலை நடைமுறையின் ஒரு தனிச்சிறப்பாகும், மேலும் அவரது பல்வேறு படைப்புகள் இயற்கைக்கும், மனித வாழ்க்கைக்கும் இடையிலான சிக்கலான தொடர்புகளை எடுத்துக்காட்டுகின்றன. ஏறக்குறைய ஒரு தசாப்தக் காலமாக அவர், சிங்கப்பூரில் முன்னர் ஒரு காலத்தில் மனித வளர்ச்சியின் காரணமாக காடுகள் அழிக்கப்பட்ட நிலத்தில் வளர்ந்த பல்வேறு இரண்டாம் நிலைக் காடுகளை ஆவணப்படுத்தி வருகிறார் - இஃது ஓர் அரிதான, முன்பு பார்த்திராத அணுகுமுறையாகும்.

இரண்டாம் நிலைக் காடுகள் என்பன இடையூறு செய்யப்படாத முதன்மைக் காடுகளுக்கும் வளர்ந்த நகர்ப்புறங்களுக்கும் இடையே உள்ள நுழைவாயிலாகும். பெரும்பாலும் அவையே 19 ஆம் நூற்றாண்டிலிருந்து சிங்கப்பூரில் அறிமுகப்படுத்தப்பட்ட தாவர மற்றும்


விலங்கு இனங்களின் தாயகமாகும். மனிதர்களுக்கும் மற்றவற்றுக்கும் இடையிலான சகவாழ்வின் சிக்கலான வலையைப் பற்றிய நுண்ணறிவையும் அவை வழங்குகின்றன. இந்தப் பகுதிகள் பற்றிய ஜாவோவின் திரட்டப்பட்ட அவதானிப்புகள் அனைத்தும் சிந்தனையைத் தூண்டும் படங்கள் மற்றும் நிறுவல்களாகச் சுருக்கப்பட்டு, அவை அடுக்கு அடுக்கான கால காலவரிசைகளையும் அவை தாங்கியிருக்கும் கதைகளையும் வெளிப்படுத்துகின்றன.

காட்டைப் பார்த்தல் என்பது இயற்கையை நாம் எப்படிப் பார்க்கிறோம் மற்றும் இயற்கை நம்மை எப்படிப் பார்க்கிறது என்ற பரஸ்பரப் பார்வையைப் பற்றியது. நகர்ப்புறத் திட்டமிடல் இயற்கை உலகை எவ்வாறு வடிவமைத்துள்ளது என்பதையும், இயற்கையானது அதற்கு எவ்வாறு பதிலளிக்கிறது என்பதையும் காட்டுவதன் மூலம் சிங்கப்பூரின் வளரும் நிலப்பரப்புச் சிக்கல்களை ஆராய இது நம்மை அழைக்கிறது. நகரத்தின் கான்கிரீட்கட்டமைப்புகளுக்கு மத்தியில், மனிதக் கட்டுப்பாட்டுக்கும் முறைப்படுத்தலுக்கும்அப்பால் செழித்து வளரும் துடிப்பான சுற்றுச்சூழல் அமைப்புகளே வகைப்படுத்தல் அல்லது ஆதிக்கத்தை எதிர்க்கும் வாழ்க்கையை நம்மிடம் வளர்க்கின்றன. நகர வாழ்க்கையின் அவசரத்தில் அடிக்கடி கவனிக்கப்படாத இடங்களில் அணிவகுத்துச் செல்லும் வன நேரம் பற்றிய ஆழமான, கட்டுப்பாடற்ற தாளங்கள் போன்ற ஒரு பார்வையைக் கண்காட்சி வழங்குகிறது.

ராபர்ட் ஜாவோ ரென்ஹுய் (பிறப்பு. 1983, சிங்கப்பூர்) ஓர் இடைநிலைக் கலைஞர் ஆவார், அவர் இயற்கைக்கும் கலாச்சாரத்திற்கும் இடையிலான சிக்கலான மற்றும் இணைந்த உறவுகளை ஆராய்கிறார். நிறுவல், புகைப்படம் எடுத்தல், காணொளி எடுத்தல் மற்றும் சிற்பம் வடித்தல் ஆகியவற்றில் பணிபுரியும் ஜாவோ, நாம் வாழும் இவ்வுலகத்தை உருவாக்கும் பலதரப்பட்ட உயிரினங்கள் மற்றும் பொருள்களில் ஆர்வமாக உள்ளார், அவற்றைப் பற்றிய அனுபவங்களும் அறிவும் நமது கூட்டு இருப்பை வளப்படுத்துகின்றன.

சிங்கப்பூரின் 'கில்மேன் பாராக்ஸ்' என்ற முகவரியில் உள்ள தி ஃபாரஸ்ட் இன்ஸ்டிடியூட் (2022) மற்றும் ஷாங்காயில் உள்ள 'ஷாங்கார்ட்' கலைக்கூடத்தின் (2023) காட்டில் உள்ள நினைவுச்சின்னங்களை ஜாவோ தனிக் கண்காட்சிகளாக நடத்துகிறார். அவரது சமீபத்திய படைப்பு அல்பீசியா (2023) என்ற தலைப்பில் அமைந்த நிகழ்த்துகலை நிறுவல் ஆகும், இது 'எஸ்பிளனேட் - தியேட்டர்ஸ் ஆன் தி பே' மூலம் நிகழ்த்தப் பணிக்கப்பட்டது. 14வது குவாங்ஜு பைனாலே (2023), 10வது பூசன் பைனாலே (2020), 6வது சிங்கப்பூர் பைனாலே (2019), 9வது ஆசிய பசிபிக் சமகாலக் கலையின் முப்பெரும் விழா (2018), 11வது தைபே பைனாலே (2018), 17வது ஜகார்த்தா பைனாலே (2017) மற்றும் சிட்னியின் 20வது பைனாலே (2016) ஆகியவற்றிலும் அவர் இடம்பெற்றுள்ளார்.

2010 ஆம் ஆண்டில், ஜாவோ மதிப்புமிக்க தேசியக் கலைக் குழுவின் இளம் கலைஞர் விருதைப் பெற்றார், இது 35 மற்றும் அதற்குக் குறைவான வயதுடைய இளம் கலைப் பயிற்சியாளர்களுக்கான சிங்கப்பூரின் மிக உயர்ந்த விருதாகும். அவர் 2017 இல் ஹ்யூகோ பாஸ் ஆசியக் கலை விருதுக்கான இறுதிப் போட்டியாளராகவும் இருந்தார்.




1. குப்பை அடுக்கு
2. சிங்கப்பூரின் இரண்டாம் நிலை வனத்திற்கான வழிகாட்டி
3. பஃபி
4. ஆந்தை, பயணிகள் மற்றும் சிமெண்ட் வடிகால்

## 1. குப்பை அடுக்கு

கண்காட்சியின் மைய அமைப்பு அடுக்கப்பட்ட மரப்பெட்டிகளால் செய்யப்பட்ட நொறுங்கும் அலமாரி ஆகும். இஃது ஆர்வங்களின் அலமாரிகளை நோக்கித்திரும்புகிறது, அதே நேரத்தில் அதனுடன் தொடர்புடைய சேகரிப்பு மற்றும் வகைப்படுத்தலுக்கான காலனித்துவ அணுகுமுறைகளுக்குச் சவாலும் விடுகிறது. இந்தக் கட்டமைப்பிற்குள், காட்டில் வாழ்ந்தபுலம்பெயர்ந்த தொழிலாளியால் விட்டுச்செல்லப்பட்ட குப்பைத் தொட்டியால் உருவாக்கப்பட்ட நீர்ப்பாசனக் குழியைப் பார்வையிடும் பல்வேறு உயிரினங்களை 14 திரைகள் காட்டுகின்றன. மேலும் காட்டில் இருந்து ஓவியர் சேகரித்த பொருள்களின் நெருக்கமான புகைப்படங்களும் இடம்பெற்றுள்ளன.

இந்தப் படங்களுக்கு இடையிடையே பல்வேறு காப்பகப் புகைப்படங்கள் மற்றும் காட்டில் இருந்து எடுக்கப்பட்ட பொருள்கள் வைக்கப்பட்டுள்ளன. ஓவியரின்ஆராய்ச்சியின் போது சேகரிக்கப்பட்ட, இந்தப் பொருள்கள் மழைக்குப் பிறகு ஆற்றின் அடிப்பகுதியில் காணப்பட்டன, அல்லது பலத்த காற்றுக்குப் பிறகு விழுந்த மரங்களின் வெளிப்படும் வேர்களுக்குள் சிக்கியிருந்தன. மனித வரலாற்றுடன் சேர்ந்து தொடர்ந்து வளரும் போது அவ்வரலாற்றைக் காடு எவ்வாறு பாதுகாக்கிறது என்பதற்கான சாட்சியமாக அவை உள்ளன.

ஒட்டுமொத்தமாக, காட்சிகளும் பொருள்களும் ஓர் இடத்திற்குள் காலப்போக்கில் ஏற்படும் மாற்றங்கள் மற்றும் வனத்தின் முடிவில்லாத மறுசீரமைப்பு ஆகியவற்றைப் பேசுகின்றன. இயற்கையின் மீதான கட்டுப்பாட்டைப் பற்றிய காலனித்துவக் கதைகளை சீர்குலைப்பதன் மூலம், மனிதனுக்கும் மற்றவற்றுக்கும் இடையிலான அதிகத் திரவ உறவுகளைக் குப்பை அடுக்கு கற்பனை செய்கிறது, இது நாம் சிக்கிக் கொண்டிருக்கும் இருப்பை நினைவூட்டுகிறது.

## 2. சிங்கப்பூரின் இரண்டாம் நிலை வனத்திற்கான வழிகாட்டி

இந்தக் கற்பனையான வன வரைபடம், சிங்கப்பூரின் இரண்டாம் நிலைக் காடுகளில் ஓவியர் மேற்கொண்ட விரிவான ஆய்வுகள் மற்றும் ஆராய்ச்சிகளின் மேலோட்டப் பார்வையை அளிக்கிறது. இரண்டாம் நிலைக் காடுகள் என்பன முதன்மைத் தாவரங்களின் அழிவுக்குப் பிறகு முளைத்த காடுகள் ஆகும். இத்தகைய காடுகளில் பெரும்பாலும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு இனங்கள் வாழ்கின்றன, அவை புதிய சுற்றுச்சூழல் அமைப்புகளை உருவாக்க ஒன்றுடன் ஒன்று தொடர்பு கொள்கின்றன. இரண்டாம் நிலைக் காடுகளின் வளமான சூழலியலை பிரதிபலிக்கிற, குறிப்பாக 'புக்கிட் பஞ்சாங்கில் உள்ள அவரது வீட்டிற்கு அருகில் உள்ளதும் மறக்கப்பட்ட அரசியின் சொந்த மலைப் பகுதியுமாகிய (இன்று கில்மேன் பேரக்ஸ்) அப்பகுதியில் ஜாவோ அடிக்கடி நடந்து செல்லும் போது, நீண்ட காலத்திற்கு இயக்க உணரிப் பதிவன்களில் படம்பிடிக்கப்பட்ட குறியீட்டு நிலையங்கள் மற்றும் அம்சங்களை இந்த வரைபடம் உள்ளடக்கியுள்ளது.

வரைபடத்தில் சித்தரிக்கப்பட்ட கூறுகளில் குறிப்பிடத்தக்க இயற்கை மற்றும் மனிதனால் உருவாக்கப்பட்ட அல்பீசியா மரங்களும் ஒன்று. அவை அவற்றின் விரைவான வளர்ச்சியின் காரணமாக ஆரம்பத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட இனம் ஆகும். அவை சிங்கப்பூரின் இரண்டாம் நிலைக் காடுகளில் விரைவாகக் கலந்தன. மற்றொன்று பிரிட்டிஷ் காலனித்துவக் காலத்திலிருந்து உடைந்த கான்கிரீட் வடிகால் ஆகும், இது காடுகளின் சுற்றுச்சூழல் அமைப்புக்கு இன்றியமையாத ஒரு நதியை மறைத்தது.

## 3. பஃபி

வெளிர்மஞ்சள் நிற மீன் ஆந்தை (Buffy Fish Owl) தென்கிழக்கு ஆசியாவைச் சேர்ந்த ஒரு பறவை. நன்கு மரங்கள் நிறைந்த பூங்காக்கள் மற்றும் இயற்கை இருப்புகளில் வசிப்பதாக அறியப்பட்ட இந்த ஆந்தை, கில்மேன் பாராக்ஸில் விரிசல் விழுந்த சிமென்ட் வடிகாலில் இருந்து தண்ணீர் குடிப்பதை அவதானிக்க முடிந்தது. பறவையின் முதுகு நமது பக்கமாகத் திரும்பியிருக்கும் அதன் உருவம், கிரேக்கத் தத்துவஞானி ஹெராக்ளிட்டஸின் புதிரான பழமொழியான “இயற்கை மறைக்க விரும்புகிறது.” என்பதை நினைவூட்டுகிறது. இயற்கையானது அதன் உண்மைகளை மறைக்கும் ஓர் உள்ளார்ந்த போக்கை எவ்வாறு கொண்டுள்ளது என்பதை இந்தக் கலைப்படைப்பு குறிப்பிடுகிறது, விஷயங்களின் உண்மையான சாராம்சத்தை எளிதில் கிரகித்துக் கொள்ளவோ அல்லது புரிந்து கொள்ளவோ முடியாது என்ற கருத்தை இது குறிக்கிறது.

## 4. ஆந்தை, பயணிகள் மற்றும் சிமெண்ட் வடிகால்

இந்தக் காணொளி, ஒரு தசாப்தத்தில் சிங்கப்பூரில் உள்ள இரண்டாம் நிலைக் காடுகளின் காட்சிகளைச் சேகரிக்கிறது. 26வது மாடியில் உள்ள அவரது அடுக்குமாடி குடியிருப்பில் இருந்து உருப்பெருக்கி ஆடி வில்லையைப் பயன்படுத்தி, காட்டில் அவர் பொருத்தியிருந்த இயக்கம்-உணரிப் பதிவன் மற்றும் சூடு-உணரிப் பதிவன்களைப் பயன்படுத்தி, ஓவியர் காட்டிற்குச் சென்றபோது எடுக்கப்பட்ட காணொளித் தருணங்களும் இதில் அடங்கும்.

இந்த இரண்டாம் நிலைக் காடு என்பது இயற்கையும் மனிதனால் உருவாக்கப்பட்ட கூறுகளும் தொடர்பு கொள்ளும் இடமாகும். அவற்றில் அறிமுகப்படுத்தப்பட்ட இனங்களுடன் பூர்வீக இனங்கள் ஒன்றிணைந்து, கடந்த காலமும் நிகழ்காலமும் பின்னிப் பிணைந்துள்ளன. கைவிடப்பட்ட கூடாரங்கள் மரத்தடியில் வாடுகின்றன. விலங்குகள் மற்றும் புலம்பெயர்ந்த பறவைகள் ஒரு குப்பைத் தொட்டி மற்றும் உடைந்த கான்கிரீட் வடிகால் மீது ஓய்வெடுக்கின்றன. பிரிட்டிஷ் காலனித்துவக் காலம் மற்றும் ஜப்பானிய ஆக்கிரமிப்பு ஆகியவற்றின் இராணுவ வசதியிடங்களின் எச்சங்களும், புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் விட்டுச் சென்ற பொருள்களும் காடுகளில் சிதறியும், புதைக்கப்பட்டும் உ ள்ளன. இந்த நிலப்பரப்பில் அடுக்கி வைக்கப்பட்டுள்ளவை, காட்டு வழியாகச் சென்று காட்டில் காட்டில் காணும் விஷயங்களையும் காடு காணும் விஷயங்களையும் பேசும் இரண்டு பயணிகளால் புரிந்துகொள்ள முடியாத கதை ஆகும்.

இயற்கை உலகம் மற்றும் மனித தலையீட்டால் ஏற்படும் நிகழ்வுகளுக்கு இடையே உள்ள மாறுபாடு மற்றும் தொடர்புகளை முன்னிலைப்படுத்த கலைப்படைப்பின் இரண்டு திரைகளும் வேண்டுமென்றே இணைக்கப்பட்டுள்ளன. இதன் மூலம், நகர்ப்புற விரிவாக்கத்தால் தொடர்ந்து வடிவமைக்கப்பட்டு

அழிக்கப்படும் இந்தக் காடுகளை மறு-கற்பனை செய்யத் தூண்டுகிறார், மனிதர் மற்றும் மனிதரல்லாதவர், சொந்த நாடு மற்றும் வெளிநாடு ஆகியவற்றுக்கு இடையிலான எல்லைகள் தகர்க்கப்படும் சாத்தியக்கூறுகள் கொண்ட மாறிக்கொண்டே இருக்கும் இடமாக மறு-கற்பனை செய்து பார்க்கத் தூண்டுகிறார்.

பத்துக் காட்சிகளில், சிங்கப்பூரில் உள்ள இரண்டாம் நிலைக் காடு பற்றிய அறிமுகம்:

**1. எனது அடுக்கக வீட்டின் ஜன்னலில் இருந்து, நான் காட்டின் விளிம்பைப் பார்க்க முடியும்**
சிங்கப்பூரில், நகர்ப்புற மற்றும் இயற்கை இடங்கள் பெரும்பாலும் அருகாமையில் உள்ளன, வளர்ச்சியானது தொடர்ந்து அத்தகைய இடைவெளிகளுக்கு இடையிலான எல்லைகளை மாற்றுகிறது.

**2. பயணிகள்**
இரண்டு பயணிகள் காடு வழியாகச் சென்று ஆவிகளைப் பற்றிப் பேசுகிறார்கள். மேலே, கிளிகள் பறக்கின்றன.

**3. தெய்வீகத்தின் சின்னங்கள் குப்பையடுக்கில் தோன்றுகின்றன**
ஒரு காலத்தில் காட்டில் வாழ்ந்த சட்டவிரோதக் குடியேறிகளின் முகாம் விலங்குகள் கூடுகின்ற இடமாக மாறுகிறது. வாளிகள், பாட்டில்கள் மற்றும் கறுப்புக் குப்பைத் தொட்டி போன்ற முகாமில் உள்ள பொருள்கள், அவைஉயிர்வாழ்வதற்கு முக்கியமானவையாக மாறுகின்றன.

**4. சிமெண்ட் வடிகால்**
1935 இல் கட்டப்பட்ட கான்கிரீட் வடிகால் சிதைந்ததால் ஓர்இயற்கை ஓடை மீண்டும் வெளிப்படுகிறது.

**5. வேறோர் உலகம் உள்ளது, ஃது இதில் உள்ளது**
காட்டுப்பன்றிகளும் மனிதர்களும் குறுக்கிடும் பாதைகளும் காட்டின் ஓரத்தில் உள்ளன. இரண்டு பயணிகள் ஒரு முன்னாள் பிரிட்டிஷ் இராணுவ முகாமில் இருந்து ஒரு பழைய கற்பலகையைக் கண்டுபிடிக்கின்றனர். சாம்பார் மான்கள் அருகில் இருந்து கவனிக்கின்றன. 1900 முதல் 1940 வரையிலான இரண்டாம் நிலைக் காடுகளின் வரலாற்றுப் படங்கள் காட்டப்பட்டுள்ளன. ஓர் உடும்பு காட்டில் பயணிக்கிறது.

**6. புதிய உலகங்கள்**
பயணிகள் காட்டில் நடக்கும் நிகழ்வுகளைக் கவனிக்கின்றனர். மனிதர்கள் விட்டுச் சென்ற பொருள்களை விலங்குகள் ஆராய்கின்றன.

**7. பன்றியாக மீண்டும் வருகிறது**
என் ஜன்னலிலிருந்து ஒரு காட்டுப்பன்றி பிரசவிப்பதை நான் கவனிக்கிறேன். அருகில், காடு அழிக்கப்பட்டு வருகிறது.

**8. ஒரு மான் உலகின் இறுதிவரை செல்கிறது**
காட்டில் சாம்பார் மான்கள் தோன்கின்றன. சமீப காலம் வரை, அவை சிங்கப்பூரில் அழிந்துவிட்டதாகக் கருதப்பட்டன. அவற்றின் தற்போதைய தொகை எங்கிருந்து வருகிறது என்று தெரியவில்லை.

**9. கிளிக்கு என்ன தெரியும் என்று யாருக்குத் தெரியும்?**
இந்த மரத்தில் தினமும் இரவு 7 மணிக்கு கிளிகள் கூட்டமாக வந்து தங்கும். பயணிகள் காட்டில் தங்கள் நடைப்பயணத்தை முடிக்கிறார்கள், அவர்களில் ஒருவர் தன்னை விடுவித்துக்கொள்ள முடிவு செய்கிறார்.

**10. எனது ஜன்னலின் வழியாகப் பார்க்கும் காட்சி, 2014 மற்றும் 2024.**